


**18. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டு மக்களுக்கான நல் ஆளுமை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தேசத்தின் மேம்பாட்டிற்கான முதுகெலும்பாக சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

3. புத்தக வாசிப்பின் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. தை அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. இந்தோரில் இந்தியாவிற்கு எதிரான 3ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

நாட்டு மக்களுக்கான நல் ஆளுமை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் 2 புதிய அம்ரித் பாரத் ரயில் சேவைகளை இன்று கொடியசைத்து துவக்கிவைத்து பேசிய பிரதமர், அஸ்ஸாம் காலியாபோரில் 6 ஆயிரத்து 950 கோடி ரூபாய் மதிப்பில் இன்றுஅடிக்கல் நாட்டடப்பட்ட காஸிரங்கா உயர் வழிதடம் வன விலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு பல்லுயிர் பெருக்கத்திற்கும் வழிகோலும் என்றார்.

இயற்கையை பாதுகாப்பதன் மூலம் மனிதகுலத்திற்கு பல்வேறு வாய்ப்புகள் உருவாக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், காஸிரங்கா சுற்றுலா நிலையான வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் வழிகாட்டி சேவைகள் போக்குவரத்து கைவினை பொருட்கள் மற்றும் சிறு வணிகங்கள் மூலம் உள்ளூர் இளைஞர்களின் வருவாய் அதிகரித்துள்ளதாக கூறினார்.

தொடர்ந்து பிரதமர் மேற்கு வங்க மாநிலத்தில் 3 அம்ரித் பாரத் விரைவு ரயில்சேவைகளை இன்று தொடங்கிவைக்கிறார்.

***********

விஸ்வகர்மா

தேச வளர்ச்சிக்கான முதுகெலும்பாக சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் திகழ்வதாக மத்திய சிறு குறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜிதன்ராம் மாஞ்சி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிரதமரின் விஸ்வகர்மா பாரம்பரிய கைவினை பொருட்கள் கண்காட்சியை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், கைவினை பொருட்களை சந்தைபடுத்தும் தளமாக இக்கண்காட்சி அமைந்துள்ளதாக கூறினார்.

இளையோருக்கான புதிய வேலை வாய்ப்புகளை விஸ்வகர்மா திட்டம் உருவாக்குவதாக தெரிவித்தார்.

வரும் 31ஆம் தேதிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

***********

குடியரசு தினம் - பாதுகாப்பு

நாட்டின் 77ஆது குடியரசு தினம் வரும் 26ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் நாடுமுழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் கூடும் இடங்கள், ரயில் விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் வரும் 30ஆம் தேதிவரை ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கருதி, குடியரசு தலைவர் மாளிகையை பொதுமக்கள் பார்வையிட வரும் 21ஆம் தேதிமுதல் 29ஆம் தேதிவரை அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

***********

முதலமைச்சர் - புத்தக திருவிழா

புத்தக வாசிப்பின் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட 84 நூல்களை வெளியிட்டு பேசிய முதலமைச்சர் தமிழக அரசு சார்பில் தேசிய அளவில் செம்மொழி இலக்கிய விருது வழங்கப்படும் என்றார்..

மொழி பெயர்ப்பு நூல்களின் மூலம் உலக அளவிலான உயரிய சிந்தனைகளை தமிழர்களிடம் கொண்டு சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழ்நாடு, தொழில் முதலீட்டிற்கு மட்டுமன்றி சிந்தனைகளை பகிர்ந்துகொள்ளும் சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று கூறிய அவர், அனைத்து மாவட்டவங்களிலும் புத்தக திருவிழாக்கள் நடத்தப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி கடந்த 16 ஆம் தேதி தொடங்கிய இந்த புத்தக திருவிழாவில் 104 நாடுகளை சேர்ந்த பதிப்பாளர்கள் கலந்துகொண்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டில் அமைக்கப்பட்டுள்ள, நதி நீர் இணைப்பின் முன்னோடி, மன்னர் காலிங்கராயனின் முழுஉருவ சிலையை முதலமைச்சர் சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

***********

கூட்டு பயிற்சி

இந்திய ஜப்பான் கடலோர காவல்படைகளின் கூட்டு பயிற்சி மும்பையில் இன்று நடைபெற்றது.

கடல்சார் கூட்டாண்மையை எடுத்துரைக்கும் வகையில் இப்பயிற்சி நடைபெற்றது.

***********

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்குகிறது.

இந்தாண்டின் முதல் கூட்டத்தொடர் இது என்பதால் ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உரையுடன் கூட்டத்தொடர் தொடங்க உள்ளது.

அலுவல் ஆய்வுக்குழு கூடி இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவெடுக்கும்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளதை அடுத்து இக்கூட்டத்தொடரில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்.

***********

தை அமாவாசை

தை அமாவாசை பக்தி சிரத்தையுடன் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ராமேஸ்வரம், கன்னியாகுமரி கடல் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு நீர்நிலைகளில் மக்கள் அதிகாலையிலேயே புனித நீராடி முன்னோர்களுக்கு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர்.

ராமேஸ்வரம் அக்னிதீர்த்தத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்து புனித நீராடிய மக்கள் ராமநாதசுவாமி திருக்கோவிலில் வழிபாடு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில் பெருந்திரளான மக்கள் அதிகாலையிலேயே புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

நாகை வேதாரண்யம் சன்னதி கடல், கோடியக்கரை ஆதிசேது கடல் பகுதிகளிலும் அரிசி காய்கனிகள் போன்றவற்றை படைத்து, முன்னோர்களுக்கு திதி கொடுத்து மக்கள் புனித நீராடி வழிபட்டனர்.

குற்றாலம், திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், ஒகேனக்கல் காவிரி ஆறு, திருவையாறு காவிரி ஆற்றங்கரை, மயிலாடுதுறை காவிரி துலாகட்ட பகுதியிலும் ஏராளமானோர் புனித நீராடி முன்னோர்களுக்கு நேர்த்திகடன் செலுத்தி வழிபட்டனர்.

***********

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களையும் மேற்கொள்ளலாம்.

அடுத்த மாதம் 17ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

***********

JEE

BE., B.Tech உள்ளிட்ட பொறியியல் படிப்புகளுக்கான ஒருங்கிணைந்த JEE தகுதி தேர்விற்கான நுழைவு சீட்டுகளை தேசிய தேர்வு முகமை இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

முதன்மைதேர்வு வரும் 21ஆம் தேதிமுதல் 24ஆம் தேதி வரை நடைபெற உள்ளன.

***********

இருவரி

தமிழகத்தில் பொங்கல் பரிசுதொகுப்பு பெறாத குடும்ப அட்டை தாரர்கள் அந்தந்த நியாயவிலைக்கடைகளில் அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் நாள் கூட்டம் ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் வரும் 23ஆம் தேதி நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுதந்திர போராட்ட தியாகி ஜீவா அரங்கம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி ஆய்வு மேற்கொண்டார்.

வீரு கவியரசர் முடியரசனார் திருவுருவ சிலை அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வன பகுதியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இரவு நேரங்களில் புலிகள் நடமாட்டம் காணப்படுவதை அடுத்து வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் இரவு நேரங்களில் தேவையின்றி வெளியே வருவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***********

ரயில்

நாகர்கோவில் - தாம்பரம் இடையே சிறப்பு அதி விரைவு ரயில் இன்று இயக்கப்படுகிறது.

இன்று மாலை 5 மணிக்கு நாகர்கோவிலில் இருந்து புறப்படும் இந்த ரயில் மதுரை – திண்டுக்கல் - திருச்சி – விருதாச்சலம் வழியாக நாளை காலை 4.10க்கு தாம்பரம் சென்றடையும்.

***********

நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் தொடர் விடுமுறையை ஒட்டி சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தைபூச திருவிழாவை ஒட்டி பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் பாதை யாத்திரையாக வந்து தங்களது நேர்த்திகடனை செலுத்திவருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட காவல்துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

***********

கிரிக்கெட்

இந்தோரில் இந்தியாவிற்கு எதிரான 3ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் நியூசிலாந்து சற்றுமுன் 5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 16 ரன் எடுத்திருந்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

***********

டென்னிஸ்

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் மெல்பர்னில் இன்று தொடங்கின.

வரும் பிப்ரவரி 1ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

***********

இத்துடன் செய்தியறிக்கை முடிவடைந்தது